
www.tamilarangam.net

# செய்திக்கோவை

நவேம் 22

T·I·B

* ஜனவரி, 87 *




## புரட்சி வெல்வோம் ! உயர்ச்சி கொள்வோம் !

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எண்ணம்

தமிழீழம் விரைவில் மலரும் ,அங்கு மக்களாட்சி நிலவும் ,எங்கள் அன்புத்தமிழ் ,ஆசைத்தமிழ் எதிலும் தவழும் என்றெல்லாம் எம்மின மக்கள் கனவு கண்டார்கள். எம்பி எம்பிக் குதித்தார்கள். விடுதலைத் தீ சுடர்விட்டு எரிய அதன்மேல் தமது உடமைகளையும் உயிர்களையும் விட்டு எறிந்தார்கள். வழமாக வாழ்ந்தஎம் மக்கள் இழப்பதற்கு ஏதும் இல்லாதவர்களாம் ஒரு வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
விடுதலை இயக்கங்களுக்கு குறிப்பாக விடுதலைப்புலிகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தார்கள். அவர்கள் செய்த சின்னத்தனமான காரியங்களை எல்லாம் விமர்சனங்கள் விடுதலைப்போரில் தொய்யலை உண்டு பண்ணும் என்றெண்ணி பாரா முகமாய் இருந்தார்கள். ஆம் விடுதலைப் போர் தொடர்ந்து நடக்க வேண்டும் ,விரைவிலே தமிழீழம் மலர வேண்டும் என்ற இலட்சிய வெறியால் உந்தப்பட்டு தடங்கல் வர எந்தவிதத்திலும் தாங்கள் காரணமாய் இருக்கக் கூடாது என்ற நல்ல நோக்கத்துடன் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்ல புலிகளை தட்டிக் கொடுத்துக்கொண்டும் இருந்தார்கள்.

அதன் உள் அர்த்தத்தை தவறாகப் புரிந்து கொண்ட புலிகள் இன்று தலைகால் தெரியாமல் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். பட்டிப்பளை பாலாவி பயிலும் நல் முத்தாறுகள் என்று பாடப்பட்ட தமிழீழம் இன்று காங்கேசன் துறைக்கும் ஆனையிறவுக்கும் இடையில் யாழ்ப்பாணம் என்ற பிரதேச வேறுபாட்டைப் பறை சாற்றிக்கொண்டு அடங்கியிருக்கிறது. அதுவும் சில நூறு ஆயுதம் தாங்கிய புலிகளால் அடக்கியாளப்பட்டுக்கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாண நகருக்குள் சர்வசாதாரணமாய் இராணுவம் வந்துபோன ,1984 ம் ஆண்டைவிட புலிகளால்அடைத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படும் 1985 ம் ,1986ம் ஆண்டுகளில் ஏற்படுத்திய உயிர்சேதமும் பொருட்சேதமும் அதிகம் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. ஆனந்தராஜா இராணுவத்துடன் மாணவர்கட்கு விளையாட்டுப் போட்டியை ஒழுங்குபடுத்தினார் என்ற குற்றம் சாட்டப்பட்டு புலிகளால் கொல்லப்பட்டார். இன்று அதே புலிகள் சிறிமாவின் மருமகனுக்கு யாழ்ப்பாணத்தில் மேடைபோட்டு கூட்டமும் சேர்த்துக் கொடுத்தனர். அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர் என்பதற்காக கூட்டணி எம். பி களை புலிகள் கொன்றனர் இன்று அதே புலிகள் அரசுடன் தனியாக பேசுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஒரு தினசாரி புலிகளை கண்டித்து எழுதிவிட்டது என்பதற்காக அப் பத்திரிகையை நிறுத்தி விட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் புலிகள் நாளுக்கு நாள் புதிய சட்டங்களை பிறப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். உயிரை வெறுத்து கடலில் இறங்கிப்பிடிக்கும் மீனுக்கு வரி. மரத்தில் காய்க்கும் மாங்காய்க்கு வரி. கோழிஇடும் முட்டைக்கு வரி. ஓடாத வாகனத்திற்கு வரி. ஓடும் வாகனத்திற்கு வரி. இன்னும், தொலைக்காட்சி ,வானொலிக்கு வேறு வகையான கட்டணங்கள் ஆனால் மக்களுக்கோ நிலையான வருமானம் இல்லை. உணவுப் பொருட்களோ இரட்டிப்பு விலை அதற்கு மேலாம் புலிகளின் வரிச்சுமை!

வீட்டுக்கொரு பவுண் கேட்டு நிர்ப்பந்தித்தனர். அரசு அழித்தது எமது பொருளாதார வளங்களை ,மீதியுள்ளதை நீங்கள் அழிக்கிறீர்கள் என்று வாய்விட்டு அழுதனர் மக்கள். இன்று வீட்டுக்கொரு பிள்ளை கேட்கின்றனர் புலிகள். ஆயுத முனையில் இளைஞர்களைக் கடத்திச் சென்று கட்டாய இராணுவப் பயிற்சி கொடுக்கின்றனர். வர மறுப்பவர்களை டெலோ என்று கூறிசுட்டு கொல்கின்றனர்.

உள்ளூர் உற்பத்திக்கு ஊக்குவிப்பு என்ற பெயரில் உடம்பை எரிக்கும் சவர்க்காரங்களும் சுகாதாரத்திற்கு உதவாத பண்டங்களையும் வாங்கும்படி மக்களை நிர்ப்பந்திக்கிறார்கள். இராணுவம்அதைத் தொடர்ந்து புலிகளின் கெடுபிடிகள்காரணமாய் யாழ்ப்பாணத்தில் இருந்து புத்திஜீவிகளும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். வளரும் தம் பிள்ளைகளின் அறிவு சூன்யமாகி விட்டதை எண்ணி எண்ணி ஒவ்வொரு பெற்றோரும் கண்ணீர் விடுகின்றனர். விடாதே எப்படியும் யாழ்ப்பாணத்தவர்களை அழித்துவிடு என்பதுபோல் மேற்கு நாடுகளில் உள்ளவர்கள் இன்னும் இன்னும் புலிகளுக்கு அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் மெல்லவே தனது கட்டுப்பாட்டை விட்டு மீறுவதை உணர்ந்த அரசும் புத்திசாலித்தனமாய் செயற்படத் தொடங்கி விட்டது. எரி பொருள் விநியோகத்தை முற்றாக நிறுத்திவிட்டது. இதேபோல், மின்சாரமும் தடை செய்யப்பட்டு விட்டது. இத்துடன் இனி உணவு விநியோகமும் கட்டுப்படுத்தப்படுமாம்.

ஒரு புறம் புலிகளின் கெடுபிடி மறுபுறம் அரசின் நெருக்கடிகள்...
இந்நிலை நீடிக்குமானால்...ஐயோ யாழ்ப்பாணமே...
உன் கதி இதுதானா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 2வது ஆண்டு நிறைவில் செயலதிபர்.



தமிழீழ தகவல் நடுவத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு தினமான — இன்று, இவ் உரையினூடாக உங்கள் அனைவருடனும் தொடர்பு கொள்வதில் பேருவகை கொள்கின்றேன்.

ஸ்ரீலங்கா பேரினவாத அரசானது தமிழ் மக்கள் மீது அன்றாடம்நடாத்தி வரும், இன நசுக்கல் நடவடிக்கைகளை எதிர்த்து, தமிழீழ மக்கள் நடாத்தி வரும் உரிமைப் போராட்டம் உலகறிந்ததே!

ஆனால் அரசானது, தனது அடாவடித்தனங்களை வெளியுலகிற்கு மூடிமறைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில் பத்திரிகை தணிக்கை செய்துள்ளதோடு, வெளிநாட்டு பத்திரிகையாளர்களை வெளியேற்றும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகிறது.

போராட்ட காரணங்களால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையானது வெளியுலக தொடர்புகளை ஏற்படுத்த முடியாமலும் செய்துள்ளது.

இவற்றை எல்லாம் தாண்டி எமது போராட்டம் குறித்த நிலைப்பாடுகளை, அரசினது அத்துமீறல்களையும் உடனுக்குடன் தெரிவிக்குமுகமாக ஆரம்பிக்கப்பட்டது தான் தமிழீழ தகவல் நடுவம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பமான நடுவமானது, இன்று மிகப் பெரிய அளவிலான வளர்ச்சியைப் பெற்றிருப்பதானது, எமது போராட்டத்திற்கு கிடைத்திருக்கும்வெற்றியேயாகும்.

இன் நடுவத்தின் வளர்ச்சியை அது நாளாந்தம் நடாத்தி வரும் 24 மணிநேர இரு மொழிச் செய்தி ஒலிபரப்பின் மூலம் தெரிந்து கொள்ளலாம்

நடுவத்தினது இப் பாரிய வளர்ச்சிக்கு காரணமாக, நடுவத்தினர்க்கு— பலவகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வரும் அனைத்து மக்களிற்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதே வேளை தொடர்ந்து வரும் காலப்பகுதிகளிலும், இவ் ஒத்துழைப்பை தொடரச் செய்வதன் மூலம், அவர்களது சேவையை மென் மேலும் — பெருக்க உதவ முன்வர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழீழ தகவல் நடுவத்தின் இப் பாரிய வளர்ச்சிக்கு பகுதியாகவும்— முழுமையாகவும் பங்களிப்பை ஆற்றிய தோழர்களுக்கும், நண்பர்களுக்கும், எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, தொடர்ந்து வரும்காலப்பகுதியிலும் தமிழீழத்தில் அன்றாடம் நடந்து வரும் சம்பவங்களை வெளியுலகிற்கு உடனுக்குடன் தெரியப்படுத்துவதுடன், எமது போராட்டம் குறித்து சரியான விளக்கத்தை சரியான முறையில் முன்வைத்து, தமிழீழ விடுதலைப்— போராட்டத்தை துரிதமாகவும், சிறப்பாகவும் முன்னெடுப்பதற்கு தங்கள் பங்களிப்பு தொடர வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

"உலக அனைத்து சக்திகளும் தமது தார்மீக ஆதரவை வழங்கிட வேண்டும்."

—தோழர் உமா.

## 1987

நிரந்தர அமைதி தரக்கூடிய ஆண்டாக, மலரும் புத்தாண்டு அமையும்— என்று தமிழ் மக்கள் நம்பினார்கள். எதிர் பார்ப்புகள் மனதில் தாண்டவமாட, புது வருடத்தை வரவேற்கத் தயாரானார்கள். ஆனால், அந்தோ பரிதாபம். "அவலத் தொட்டிலில் மக்களைப் போட்டு அங்கே புலிகள் ஆட்டிக்கொண்டிருக்கிறார்கள்."

ஆமாம் போடும் ஒரு கூட்டத்தினரை அருகில் வைத்துக் கொண்டுதமது அதீத கற்பனைகளை அன்றாடம் அவிழ்த்துக் கொண்டிருந்தார்கள். கச்சேரி கோடு, ,முத்திரை, , நாணயம், , இப்படியே 'சிவில் நிர்வாக' அமுலாக்கம் புதிய ஆண்டு முதல் என்றார்கள்? அரசாங்கமோ அதன் விநியோகங்களை சிறிது கட்டுப்படுத்தியது.

மாற்றுத்திட்டங்கள் கைவசம் இல்லாத புலிகள் ஆடிப்போய் விட்டார்கள். அது மட்டுமல்ல, அரச படைகளும் ஆகாயத்தினாலும், தரையாலும் முகாம்களை விட்டு ஏக காலத்தில் வெளியேற ஆரம்பித்தது.

மக்கள் எம் பின்னால் என்று சொன்ன புலிகள், மக்களுக்குப் பின்னால் இன்று ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். தங்களது பாதுகாப்பிற்காக!

புலிகளது பலம் பற்றி தமிழ் மக்களுக்கும், அரசிற்கும் தெளிவாகத் தெரிந்து விட்டது. "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தமிழீழச் செய்திகள்

02.12.86,
கொழும்பில், சில பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்படசுமார் 50 சிங்களவர்கள், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளன.

*)மதுரையில் புகையிரதப்பாதைக்கு குண்டு வைத்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பெயரில் இலங்கையைச் சேர்ந்த 9 சிங்களவர்கள் தமிழக பொலீசாரினால்கைது செய்யப்பட்டுள்ளனர்.

03.12.86,
மட்டு.பாலமின்மடு பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட அதிரடிப்படையினர் - வீடொன்றினுள் புகுந்து 4 அப்பாவித்தமிழர்களை சுட்டுக்கொன்றுள்ளதுடன், அப்பகுதியைச் சேர்ந்த 200 அப்பாவித் தமிழர்களைக் கைது செய்து, பின்னர் 193 பேரை விடுவித்துள்ளனர்.

06.12.86,
மட்டு.காத்தான் குடியில் போராளிகளின் தாக்குதலொன்றின் போது ஒரு குழந்தை உட்பட 7 முஸ்லீம் ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர். இதனை அடுத்து அப்-பகுதியில் பஸ் ஒன்றில் சென்று கொண்டிருந்த இ.போ.ச.வைச் சேர்ந்த 11 - தமிழ் ஊழியர்கள், ஊர்காவல் படையினரால் கொல்லப்பட்டனர். இதனால் எழுந்த-பதட்ட நிலையை சாதகமாக பயன்படுத்தி, மட்டு.மாவட்டமடங்கிலும் ஊரடங்குச்சட்டத்தினை அரசு அமுல்படுத்தியது.

*)வவுனியா ஓமந்தைப் பகுதியில் பெண்களுடன் அரச படைகள் தகாத முறையில்-நடந்து வருவதனை அடுத்து, அப்பகுதி மக்கள் இராணுவ அதிகாரிக்கு புகார் செய்துள்ளனர்.

10.12.86,
யாழ்/பலாலி முகாமிருந்து கட்டுவன் பகுதியை நோக்கி, குண்டுகளை எறிந்தும், துப்--பாக்கிப் பிரயோகம் செய்தவண்ணம், வெளியேறிய அரச படைகளை, - அனைத்து விடுதலை அமைப்புகளும் -- இணைந்து தாக்கி பின்வாங்கச் செய்துள்ளனர்.

*)திருமலை மாவட்ட கட்டைபறிச்சான், சாம்பல் தீவு, குச்சவெளி பகுதிகளில் அரச படைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளன. மேலும் திருமலை மாவட்டத்தில் புதிய முகாம்களை அமைக்க-அரச முயற்சி எடுத்தும் வருகிறது.

*)முல்லைத்தீவு மாவட்ட முள்ளியவளைப்பகுதியில்150 ற்கு மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் குமரபுரம், மாமுலை பகுதிகளில் நடைபவனியாக வந்த இராணுவத்தினர்பெண்களை மானபங்கப்படுத்தியுள்ளனர்.

*)மட்டு.தம்புலுவில் பகுதியில் க.பொ.த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பரீட்சை மேற்பார்வையாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட 200 ற்கு மேற்பட்டோர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் கல்முனையிலும் பரீட்சைக்கு - தோற்றவிருந்த 40 மாணவர்கள்கைது செய்யப்பட்டனர்.

11.12.86,
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மேற்கு ஜேர்மனியில் உள்ள தமிழ் அகதிகளிடம் பயமுறுத்தி பணம் பறித்ததாக அங்கு தஞ்சமடைந்திருக்கும் தமிழர்கள் புகார் செய்ததைத் தொடர்ந்து அவ் இயக்கத்தைச் சேர்ந்த 26 பேர் ஜேர்மன் பொலீசாரால் கைது செய்யப்பட்டு, பின்னர் நால்வர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது --மேலும் தமக்கு ஆதரவு தரமறுப்போரை மரணதண்டனை வழங்கப் போவதாக எச்சரித்தல், பொது மக்களைத் தாக்குதல், இதற்காக முட்கள் பொருத்தப்பட்ட-கையுறை பாவித்தல், மின்அதிர்ச்சிவயர்கள் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுகளை புலிகள் இயக்கத்தினர் மீது மே.ஜேர்மன் பொலீசார் சுமத்தியுள்ளனர்.

13.12.86,
மட்டு.கல்முனைப் பகுதியில்பொலீஸ் ரோந்[illegible]ன்றின் மீது நடாத்தப்பெற்ற தாக்குதலொன்றைத் தொடர்ந்து, அரசபடைகள் ஒரு பெண் உட்பட 4 பேரை சுட்டுக்கொன்றதுடன், பல வீடுகள், கடைகள், அரிசி ஆலை என்பவற்றை தீக்கிரையாக்கினர்

*)முல்லைத்தீவில் ரெலோ இயக்கப்போராளிகளை கடத்திச் செல்ல முயன்ற புலிகள் இயக்கத்தினரை தடுத்து நிறுத்திய - ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தைச் சேர்ந்த 10 தோழர்களை புலிகள் இயக்கத்தினர் கடத்திச் சென்றனர். இதனைத்தொடர்ந்து புலிகள் இயக்கத்தினரின் திட்டமிட்ட நடவடிக்கையாக ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தினை அழித்தொழிக்கும் முயற்சியை தமிழீழப் பிரதேசங்களில் ஆரம்பித்தனர். ஆனால் புலிகள் நினைத்ததற்கு மா-றாக யாழ்/மாவட்டம் தவிர்ந்த ஏனைய பிர[illegible]சங்களில் புலிகள் எதனையும் சாதிக்க முடியவில்லை.
யாழ்/பகுதிகளில் இரத்தக்களரி ஒன்றினைத் தவிர்க்கு முகமாக ஈபி.ஆர்எல்எப் இனர் பின்வாங்கியதனை சாதகமாக புலிகள் பயன் படுத்தி அட்டகாசம் புரிய ஆரம்பித்தனர்.

*)முல்லைத்தீவில் புலிகளின் முகாமினை முற்றுகையிட்ட ஈபிஆர்எல்எப் இனர், அம் முகாமினுள் இருந்த முஸ்லீம் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான லொறி ஒன்றினை-யும், அப்பகுதிகளில் பொது மக்களிடம்இருந்து கொள்ளையிடப்பட்ட நகைகள் பலவற்றையும் மீட்டுள்ளனர்.

*)கொழும்பு செல்லும் வழியில் சென்-னை வந்த அமெரிக்க செனட்டர் ஸ்டீ-பன் சோலஸ், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதி நிதிகளை 17/11/86அன்று சந்தித்துப் பேசியுள்ளார். இதன் அடிப்படையிலேயே தமிழீழத்தில் சக இயக்கங்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைக-ளை வலுப்படுத்தியுள்ளனர்.

*)'சக ஈழ விடுதலைப் போராளியை கொன்று குவிப்பது ஈழ இலட்சியத்திற்கு எதிரானது! இவ்வாறு செய்வதன் மூலம் ஜெயவர்த்தனாவிற்கு பின்னால் மறைந்திருக்கும், அமெரிக்க உளவு நிறுவனமான-சி.ஐ.ஏ வரிசையில் விடுதலைப் புலிக-ளும் விட்டது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் போக்குகள் குறித்து இந்திய கம்யூனிச கட்சி தமிழ் நாட்டில் விடுத்துள்ள, அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

*)தமிழ்நாடு அடங்கிலும், புலிகள் இயக்கத்தினரை கண்டித்து, தமிழ்நாடு வெகுஜன அமைப்புகள் பல சுவரொட்டிகளை ஒட்டியுள்ளன.

21.12.86,
வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் தொடர்ந்திருக்கும் வரையில், ஒரு தலைப்பட்ச-மான சுதந்திரப் பிரகடனத்தை செய்ய முடியாமல் இருக்கின்றது என புலிகள் இயக்க பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

24.12.86,
புலிகள் இயக்கத்தினரும், ஸ்ரீலங்கா அரசும் இந்தியாவின் தலையீடின்றி சமாதானத் தீர்வொன்றை தமக்கிடையே காண, நடவடிக்கை எடுத்து வருவதாகவும், கடந்த காலங்களில் இந்தியாவின் தலையீட்டுடன் நடாத்தப் பட்ட பேச்சுகள் யாவும் தோல்வியையே தழுவின என்றும்--

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



--ஆனால் தற்போது புலிகள் இயக்கத்துடன் நடாத்தி வரும் பேச்சுகள் மூலம் தீர்வொன்றைக் காண முடியுமென்ற நம்பிக்கை தமக்கிருப்பதாக, ஸ்ரீலங்கா பாதுகாப்பமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதனை ஆதரித்து, புலிகளின் யாழ் பொறுப்பாளர் வெளியிட்ட அறிக்கையைக் கண்டித்து, அதே இயக்கத்தின் சென்னைப் பேச்சாளர் வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவின் மத்தியஸ்துவம் இல்லாது ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுக்களை நடாத்த மாட்டோமெனவும், கிழக்கு மாகாணம் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரையில், தமிழீழப் பிரகடனம் அர்த்தமற்றது என்றும் தெரிவித்துள்ளார்.

*) கிளிநொச்சிப்பகுதியில் முறிகண்டிக்கு-கிழக்கே மின்சார விநியோக கோபுரங்கள் அமைந்துள்ள பகுதியில், இரண்டு - கோபுரங்கள் போராளிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப் பட்டன. இதனைக் காரணமாக வைத்து அரசு வடபகுதிக்-கான மின்சார விநியோகத்தினை தற்-காலிகமாக நிறுத்தியது.

27.12.86,
தமிழ்நாட்டில் வைத்து கைது செய்யப்பட்ட தமது இயக்கப் போராளிகளனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டுமென கோரி ரெலோ இயக்க தலைவர் செல்வம், இராணுவப் பொறுப்பாளர் பொபி உட்பட சுமார் 50 போராளிகள் சென்னையில் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தனர்.

02.01.87 அன்று இந்திய மத்திய அமைச்சர் திரு.ப.சிதம்பரம் அவர்களின் வேண்டு கோளின் பெயரில், மேற்படி ரெலோ இயக்கத்தினரின் உண்ணாவிரதம் - கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாத நிலையில் கைவிடப்பட்டது.

*) புலிகள் இயக்கத்தின் மூலம் ஸ்ரீலங்கா அரசு சில காரியங்களை தமக்கு சாத-கமாக ஏற்படுத்தி வருகின்றது. குறிப்-பாக புலிகளையே தமிழர்களின் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்வதன் மூலம் ஏனைய இயக்கங்களை அழித்தொழிக்கும்-நடவடிக்கைகளை புலிகளின் மூலமாகவே மேற்கொண்டு வருவதாகவும், யாழ்ப்பாணத்திற்கு மட்டுமான ஒரு சில சலுகைகளைக் கொடுத்து நேரடிப் பேச்சுக்க-ளை வலுப்படுத்தி இவர்கள் மூலம் இந்தியாவிற்கு எதிரான சக்திகளை யாழ்ப்பாணத்தில் நிலைநாட்டவும் ஸ்ரீலங்கா அரசு முயன்று வருகின்றதென்றும், ஸ்ரீலங்காவின் அரசியலில் சேர்ந்து கொள்வதற்-காக 'மக்கள் முன்னணி' என்ற அரசியல் கட்சியை பிரபாகரன் தலைமையில் ஏற்படுத்தியிருப்பதன் மூலமும் ஸ்ரீலங்கா அரசின் வலையில் புலிகள் வீழ்ந்து விட்டதாகவும் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

*) ஸ்ரீலங்கா அரச பாராளுமன்ற உறுப்பினர் வின்சன் பெரேரா தலைமையிலான குழுவினர்க்கும் புலிகள் இயக்கத்தினர்க்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

*) இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளை மன்னார், தலைமன்னார் கரைகளில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினர் கைது செய்து முகாம்களில் அடைத்து வருகின்றனர்.

*) தமிழீழ மக்கள் மீதான புலி இயக்கத்தினரின் பயங்கரவாத நடவடிக்கைக-ளைக் கண்டிக்குமுகமான மாபெரும் கண்டனக் கூட்டமொன்று நடைபெற்றது. இதில் ஈரோஸ், ஈபிஆர்எல்எப், ரெலோ புளட் ஆகிய அமைப்புகளும் மற்றும் பலரும் புலிகளின் அராஜகப் போக்குக-ளைக் கண்டித்தும், இவ் இயக்கத்திலுள் ஆக்கிரமித்திருக்கும் பிற்போக்கு பயங்கரவாத சக்திகளை இனம் கண்டு வெளியேற்ற வேண்டுமெனவும், வலியுறுத்திப் பேசியுள்ளனர்.





# சின்ன மாற்றம்

வழமை போல வானம் மட்டுமே
வெளுத்து விட்டது-
கதிரவன் முகத்தில்
க[illegible]ரித் துளிகள்,
மக்கள் முகத்தில்
மரணத்து ரேகைகள்.

ஆனால்.....
வானம் மட்டுமே வெளுத்திருந்தது.

"விஜிதரனை
விடுதலை செய் "
அந்தத்
துண்டுப் பிரசுரங்களின் மேல்
அவனது. மரணச் செய்திகள்
தூவப்பட்டன.

" விஜிதரன். கொலைக்கு-. பொறுப்பு
விடுதலைப் புலிகளாம் "
காதோடு. காதாக
பேசினர் மக்கள்.

[illegible]யை அழிக்கவே
எமிலையானவர்.
எம்மவர் கைகளால்
குருதியைக் கொட்டினர்.

விமர்சனம் வைத்த
விடுதலைப் பூக்கள்
கடத்தப் பட்டு
கருக்கப் பட்டன.

பழையபடி
பூட்டனியும் பலியும்
தினசரி தினசரி
நிகழ்வுகளாயின.

வழமை போலவே
அதே ஏ.கே.47
அதே எம்.16
அதே எல்.எம்.ஜி
..........
மரணத்தின் முனையில்
மக்களை வைத்தன.

ஆனால் இப்போது ஒரு
சின்ன மாற்றம் - இவர்களின்
சீருடையில் அல்ல.
-----*********-----

மக்களைப்பிரிந்தால்
ஏ.கே. ஆயுதம்
ஏது அர்த்தம்
என்ற ஒருகுரல்.. ...
விஜிதரன் கொலைக்கும்
விளக்கம் கேட்டது.

அந்த மக்கள் கவிக்கு
3. மாத அவகாசம்
நாடு கடத்துவதாக
நகல் எழுதப் பட்டு விட்டது.

இருப்பின் உறுதியை
இழந்த நிலையில்
குருதியை விடவும்
உறுதியுடைய மக்கள் சக்தி
ஏன் இன்னும்
ஏங்க வேண்டும் ?



அராஜகம் எங்கிருந்தாலும்
அழித்தொழித்து -புதிய
ஜனநாயகம் காப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# செய்திக் குவியல்

*** சிறிமாவிடம் புதிய திட்டம்**

தமிழர்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய ,அவர்களுக்கு சுய ஆட்சி வழங்கக் கூடிய புதிய திட்டங்களை தாம் தயாரித்துள்ளதாக சுதந்திரக் கட்சி தலைவி சிறிமா தெரிவித்துள்ளார்.

**சென்னையிலும் குண்டுகள் வெடித்தன.**

தமிழ் நாட்டில் ஏற்பட்ட மொழிப் பிரச்சனையை அடுத்து தொடர்ச்சியாக பல இடங்களில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக கைதுசெய்யப்பட்ட 108 தமது தோழர்களை விடுதலை செய்யும்படி-- டெலோ இயக்கத் தலைவர் செல்வம் உட்பட 50 அவ்வியக்கத் தோழர்கள்-சாகும் வரை உண்ணா விரதம் இருந்து வந்தனர். பின்னர் இது மத்திய அமைச்சர் திரு. சிதம்பரம் தலையீட்டினால் கைவிடப்பட்டுள்ளது.

**முரண்பாடான அறிக்கைகள்.**

புலிகளுக்கும் இலங்கை அமைச்சர் வின்சன்ட் பெரேராவுக்கும் இடையில் ஏற்பட்ட பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து புலிகள் இயக்க யாழ் மாவட்ட தலைவர், கிட்டு யாழ்நகரில் இருந்து வெளியிட்டஅறிக்கையில் யாருடைய மத்தியஸ்த்தமும் இன்றி எமது பிரச்சனைகளை நாமே தீர்த்துக் கொள்வோம் என்றிருக்கிறார். இந்திய அரசு சம்பந்தப் படாத எந்தப் பேச்சுவார்த்தையும் பயன் அற்றது என. புலிகளின் மற்றொரு தலைவர் அன்ரன் பாலசிங்கம் -- சென்னையில் இருந்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

**சிதம்பரத்தின் அறிக்கை.**

இலங்கை அரசு யாழ்ப்பாணத்தில் அதன் உக்கிரமான தாக்குதலை ஆரம்பித்தற்கும் ,புதிதாய் ஆயிரக்கணக்கில் அகதிகளாய் மக்கள் வெளியேறுவதற்கும் புலிகள் தான் காரணம் என இந்திய. மத்திய அமைச்சர் திரு. சிதம்பரம் கருத்து-வெளியிட்டுள்ளார்.

**யாழ மாவட்டத்தில் புலிகளால் சிவில்.**

யாழ் மாவட்ட சிவில் நிர்வாகத்தை கவனிப்பதற்காக விசேச காரியாலயம்-ஒன்றை புலிகள் திறந்துள்ளனர். நீல நிறத்தில் அச்சிடப்பட்ட 50 சதமுத்திரையை வெளியிடவுள்ள புலிகள் சர்வதேச வர்த்தகத்தை இலகுவாக்கும் வகையில்-டொலரில் நாணய முறையினை அமுல் படுத்தவும் திட்டமிட்டுள்ளார்கள்.

**தமிழீழ இணைப்பகம்.**

புது டில்லியில் தமிழீழ இணைப்பகம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. தமிழர்-தொடர்பாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பிழையான தகவல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்குடனும் சரியான தகவல்களைவிளக்கவுமே இது ஏற்படுத்தப்பட்டது என இதன் தலைவர் செல்வி லக்சுமி நாகநாதன் தெரிவித்துள்ளார்.



# வடக்கே பயிர்கள் வாட்டம்! மரக்கறி விலை உயர்வு

## உள்ளூரில் மாட்டுவண்டி சேவை

யாழ்நகர்,

குடாநாட்டிற்கு எரிபொருள் விநியோகம் தடுக்கப்பட்ட மூன்றாவது நாளான நேற்று யாழ்நகரில் மிகமிக குறைவான வாகனங்களே தெருக்களில் காணப்பட்டன.

இ. போ. ச. பஸ்சேவை குடாநாட்டினுள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட சேவையும் ஓரிரு தினங்களே இடம் பெறும் எனச் சொல்லப்பட்டது.

**பயிர்கள் வாட்டம்**

புகையிலை, வெங்காயம் போன்ற பயிர்ச்செய்கையை பாரியஅளவில்மேற்கொண்ட விவசாயிகள் மண்ணெண்ணெய் இன்றி செயலிழந்து நிற்கிறார்கள். பயிர்கள் வாடத் தொடங்கியுள்ளன,

யாழ். மாநகரத்தில் குப்பை கூழங்களை அப்புறப்படுத்தல் உட்பட சுகாதார சேவை மாநகரசபையின் கையிருப்பிலுள்ள சொற்ப அளவு எரிபொருள் முடிந்ததும் ஸ்தம்பிக்கும் என்று ஆணையாளர் திரு. சிவஞானம் தெரிவித்தார்.

பஸ்கள் மூலம் பாடசாலைகள், அலுவலகங்களுக்கும் செல்லும் பெருந்தொகையானோர் வீட்டிலேயே இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

**மரக்கறி விலைகள் உயர்வு**

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மரக்கறி வியாபாரிகள் விலையை சற்று உயர்த்தியுள்ளனர்.

எரிபொருளை பதுக்கி வைத்த தனியார் வியாபாரிகள் பெற்றோல் ஒரு போத்தல் 40 ரூபாவுக்கு மேலும் டீசல் ஒரு போத்தல் 20 ரூபாவுக்கு மேலும் விற்பனை செய்கிறார்கள். இந்த வியாபாரமும் ஓரிரு தினங்களுக்கு மேல் நிலைக்காது.

**மாட்டுவண்டிக்கு கிராக்கி**

அரிசி, மா, சீனிபோன்ற அத்தியாவசிய உணவுப்பொருட்கள் காங்கேசன் துறைக்கு கப்பல்மூலம் வருவதால் தட்டுப்பாடு இல்லை. எனினும் அவற்றை குடாநாட்டின் சகல இடங்களுக்கும் எடுத்துச்செல்ல வாகனவசதி இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. மாட்டுவண்டிகள் சேவைக்கு விடப்படலாம் எனத் தெரிகிறது.

இணுவில் பகுதியில் புராக்டர்களில் இலைகுழைகளை ஏற்றி வந்து விவசாயிகளுக்கு வியாபாரம் செய்தவர்கள் நேற்று மாட்டுவண்டில்களில் குழைகளை ஏற்றி வந்ததை காணக்கூடியதாக இருந்தது. 05.01.87.

வீரகேசரி

25.12.86.

# பொது எதிரிக்கு எதிராக ஒருமித்து செயற்படுங்கள்

## வெலிக்கடை உண்ணாவிரதிகள் இயக்கங்களிடம் வேண்டுகோள்

(நமது நிருபர்)

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க பொது எதிரிக்கு எதிராக போராடுமாறும் விடுதலை இயக்கங்கள் ஒருவருக்கு ஒருவர் மோதுவதை கண்டித்தும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள 194 தமிழ் கைதிகள் தற்போது உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த இவ்வுண்ணாவிரதத்தில் தமிழ் கைதிகள் சுழற்சி அடிப்படையில் இருந்து வருகிறார்கள். சில வாரங்களுக்கு இது தொடரும்.

தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஒட்டி கைதிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;—


"ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகள் சமீப காலமாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அதிகரித்துள்ளன. இது எமது பொது எதிரிக்கு சாதகமாகவும் சர்வதேச சக்திகள் ஊடுருவுவதற்கும் வழி சமைக்கும்.

தமிழ் மக்களே உங்கள் பிள்ளைகள் ஒருவருக்கு ஒருவர் மோதிச் சாவதை அனுமதிக்கப் போகிறீர்களா? போராளிகளே! உங்கள் தியாகங்கள் உங்கள் சகோதரர்களுக்கு எதிராகப் பயன்படுவதை அனுமதிக்கப் போகிறீர்களா?


ஆகவே, உண்மையாகவே ஒன்றுபட்டு பொது எதிரிக்கு எதிராக செயற்பட்டு தமிழர்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்போம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அப்பு : யார் தம்பி ஓடுறது ?
பேரன் : ஓ! அதுவா, நகருக்குள் இராணுவம் முன்னேறுகிறது, அதனால புலிகள் விட்டுட்டு ஓடுகினம்.
அப்பு : எல்லா இயக்கங்களையும் ஓடச் சொன்னவை, இப்ப, தாங்களே ஓடுகினம்.
'வினை விதைச்சவங்கள் தினையா அறுப்பார்கள்.'




ஒருவர் — புலிகள், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் மிருகக்காட்சிச் சாலை ஒன்றை திறந்துள்ளார்களாம். ஆரம்பத்தில் செத்துப்போன யானைக்குப் பதிலாக புதுசா வேறு ஒன்று கொண்டுவரப் போறார்களாம். இப்படித்தான் முந்தி களியாட்டங்கள் காட்டிவந்த துரையப்பாவுக்கும் தியாகருக்கும் நடந்ததை புலிகள் மறந்திட் [illegible].

மற்றவர் — எங்கட விடுதலைக்கு போராட வந்தவங்கள், அதை விட்டுட்டு இப்ப எங்களுக்கு 'ஷோ' காட்டுகிறார்கள்.

FOR RECORDED MESSAGES, PLEASE RING
THAMIL - 01 470 6270 === ENGLISH - 01 552 5970.

[Pub]lished by: Thamileelam Information Bureau, BM Box 1916, London WC1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்